**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை - 600 025.**

**இளநிலைத் தமிழியல் - பட்டம் (B.A. TAMILOLOGY - Degree)**

**மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF - LINE WRITTEN EXAMINATION)**

**நவம்பர் - திசம்பர் 2017**

**D011 பண்டைய இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு - 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. விரிச்சி கேட்டல் என்றால் என்ன?
2. புன்னை மரம் தலைவிக்கு எத்தகைய உறவு போன்றது?
3. சேரிப்பரத்தை என்போர் யார்?
4. பாலைத்திணைக்குரிய உரிப்பொருளை எழுதுக.
5. கோப்பெருஞ்சோழனின் நண்பர் யார்?
6. பெண்கொலை புரிந்த மன்னனின் பெயர் என்ன?
7. சிறுவெண் காக்கை – எந்நிலத்திற்குரிய கருப்பொருள்?
8. அகநானூற்றின் வேறுபெயர் என்ன?
9. நித்திலக்கோவையில் அமைந்துள்ள பாடல்களின் எண்ணிக்கையைக் கூறுக.
10. சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன் யார்?
11. முல்லைக்குத் தேர் கொடுத்த வள்ளல் யார்?
12. வரலாற்றுக் களஞ்சியம் என்று அழைக்கப்படும் நூல் எது?
13. புறநானூற்றில் இடம் பெறும் யாப்பு யாது?
14. பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்து யாரால் யார் மீது பாடப்பட்டது?
15. பதிற்றுப்பத்தில் கிடைக்காமல் போன பாடல்கள் எவை?

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

1. தலைவியின் வருணனைகளாகப் பரணர் கூறுவன யாவை?
2. முளிதயிர் பிசைந்த என்று தொடங்கும் பாடலின் கருத்துக்களை எழுதுக.
3. முற்றுருவகம் - விளக்கி எழுதுக.
4. ஆற்றுப்படை குறிப்பு வரைக.
5. விறலியின் வருணனைகளைச் சிறுபாணாற்றுப்படை வழி நின்று விளக்குக.
6. பெருஞ்சோற்று நிலை குறித்து எழுதுக.
7. பாரி மகளிரின் பாடல் விளக்கும் செய்திகளைப் புலப்படுத்துக.
8. சேரனுக்கு வரி செலுத்தியோர் பெறும் நன்மைகளை பதிற்றுப்பத்து வழி நின்று விளக்குக.

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. அ. நற்றினையின் பாலைத்திணைப் பாடல்கள் உணர்த்தும் தலைமக்களின் காதல் வாழ்வியலைப் புலப்படுத்துக.

(அல்லது)

ஆ. குறுந்தொகையில் பெண்பாற் புலவர்களின் பாடல்கள் உணர்த்தும் செய்திகளைக் கட்டுரைக்க.

2. அ. பண்டைத்தமிழர்களின் திருமண முறை குறித்து அகநானூறு கூறும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

ஆ. சேரன் செங்குட்டுவனின் கொடைச்சிறப்பினைப் பரணர் வழி நின்று விவரித்து எழுதுக.

3. அ. நல்லியக்கோடனின் சிறப்புகளைத் தொகுத்தெழுதுக

(அல்லது)

ஆ. கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனின் சிறப்புகளாகப் பதிற்றுப்பத்து வெளிப்படுத்தும் செய்திகளை விரித்துரைக்க.

***